## ரூ.42.76 கோடி மதிப்பில் பணிகள்!

# நந்தன் கால்வாய் திட்டம் மூலம் 1566.20 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம்!

### கீழ்பென்னாத்தூர் தொகுதி தேர்தல் பரப்புரையில் கு.பிச்சாண்டி தகவல்!





கீழ்பென்னாத்தூர், ஏப்.19–

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் கு.பிச்சாண்டி அவர்கள் துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, திராவிட மாடல் 2.0 தேர்தல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவேன் என்று பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தார்.

முற்பகலில் கொத்தந்தவாடி, நெக்குனி, விஜயநகரம், வேடந்தவாடி, வேடந்தவாடி ஆதிதிராவிடர் குடியிருப்பு, வி.பி. குப்பம், கார்கோணம், கோவூர் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார். தொடர்ந்து பிற்பகலில் குன்னியந்தல், வள்ளிவாகை, வள்ளிவாகை ஆதிதிராவிடர் குடியிருப்பு, வி. நம்மியந்தல், ராந்தம், நூக்காம்பாடி, பாலானந்தல், மாயங்குளம், மாதாம்பாடி கணேசபுரம், மாதுளம்பாடி, மாதலாம்பாடி ஆதிதிராவிடர் குடியிருப்பு, கலஸ்தம்பாடி, கலஸ்தம்பாடி ஆதிதிராவிடர் குடியிருப்பு, மேட்டு சானாநந்தல், பள்ள சானாநந்தல் ஆகிய கிராமங்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவு திரட்டினார்.

பிரச்சாரத்தின் போது அவர் பேசுகையில்,

விவசாயிகளின் நீர்ப்பாசனத்திற்காக 10 ஆண்டுகால ஜெயலலிதா ஆட்சியில் நிறைவேற்ற முடியாத நந்தன் கால்வாய் திட்டத்தை ரூ. 42.76 கோடி மதிப்பீட்டில் என்னுடைய முயற்சியினால் ஒப்புதல் பெறப்பட்டு, தற்போது கீழ்பென்னாத்தூர் தொகுதியில் உள்ள கிராமங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த நந்தன் கால்வாய் திட்டத்தின் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில், கீழ்பென்னாத்தூர் வட்டத்தில் உள்ள 14 ஏரிகள் இணைக்கப்பட்டு, 1566.20 ஏக்கர் பரப்பளவில் உள்ள விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்க உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், கடந்த தனது ஆட்சி காலங்களில் துரிஞ்சாபுரம் மேற்கு ஒன்றியத்திற்கு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாக கூறினார். குறிப்பாக, நாயுடு மங்கலம் மதுரா அகரம் சிப்பந்தி கிராமத்தில் ரூ. 4.50 கோடி மதிப்பீட்டில் ஒழுங்குமுறை விற்பனை கூடம் அமைத்து தந்துள்ளேன் என்றும், அகரம் சிப்பந்தி ஊராட்சியில் சொரகுளத்தூர் மற்றும் தென் பள்ளிப்பட்டு இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்பவர்களுக்கு 252 புதிய வீடுகள் கட்டி வழங்கியுள்ளேன் என்றும் தெரிவித்தார்.

அதேபோல், சிறுகொத்தான் ஊராட்சியில் ரூ. 4.50 கோடி மதிப்பில் வட்ட செயல்முறை கிடங்கு அமைத்து தந்துள்ளேன், மாதலாம்பாடி மற்றும் நூக்காம்பாடி பகுதிகளில் சிமெண்ட் சாலைகள் அமைத்துள்ளேன், கலஸ்தம்பாடி பகுதியில் பயணியர் நிழற்குடை அமைத்துள்ளேன், நூக்காம்பாடியில் நாடக மேடை அமைத்துள்ளேன் என்றும் கூறினார். கீழ்பென்னாத்தூர் தொகுதி முழுவதும் குடிநீர் பஞ்சத்தை தீர்த்து, நீர்த்தேக்கத் தொட்டிகள், சாலை வசதி, கால்வாய் வசதி போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தியுள்ளேன் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், கீழ்பென்னாத்தூர் தாலுகாவாக மாற்றியமைக்கப்பட்டதற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் முயற்சிதான் காரணம் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து தேர்தல் வாக்குறுதிகளை விளக்கி கூறுகையில்,

”மீண்டும் திமுக ஆட்சி அமைந்தால், இல்லத்தரசி திட்டத்தின் கீழ் 8000 மதிப்பிலான கூப்பன் வழங்கப்படும். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 1000 இருந்து 2000 ஆக உயர்த்தப்படும். மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை 1500 இருந்து 2500 ஆக உயர்த்தப்படும். புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்படும். தற்போது ஐந்தாம் வகுப்பு வரை வழங்கப்படும் காலை உணவு திட்டம் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் என தெரிவித்தார்.

மேலும், விவசாயிகளுக்காக மீட்டர் பொருத்தப்படாத நவீன மின்சார பம்பு செட்டுகள் வழங்கப்படும், உழவர் நலத்திட்டங்கள் விரிவாக்கப்படும் என்றும் கூறினார்.

இன்றைய ஆட்சியில் புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டங்களால் பல பெண்கள் உயர்கல்வி பெறும் வாய்ப்பு பெற்றுள்ளனர், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாகியுள்ளன என்றும் எடுத்துரைத்தார். தமிழ்நாடு இன்று இந்தியாவில் முன்னணி வளர்ச்சியடைந்த மாநிலமாக திகழ்கிறது; விளையாட்டு துறையிலும் முன்னிலையில் உள்ளது; இதற்கெல்லாம் காரணம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சி எனவும் கூறினார்.

”நான் ஒரு சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்லாமல், மக்களோடு மக்களாக இருந்து உங்கள் தேவைகளை நிறைவேற்றுவேன். இந்த தொகுதிக்காக சட்டமன்றத்தில் தொடர்ந்து குரல் கொடுப்பேன். ஆகையால், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும் என வாக்காளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் ஒன்றிய செயலாளர் பா. ராமஜெயம், ஒருங்கிணைப்பாளர் கு. பாலசுப்பிரமணி, பொன். கருணாநிதி, எம். குமார், சிவராமன், வீ. தினகரன், பி. கோவிந்தசாமி, ஜே. சிவகுமார், ஏ. சக்திவேல், எம்.ஆர். குபேரன், எம். ஆர். கே. வினோத்குமார், பி. தாமோதரன், பி. கணேசமூர்த்தி, கே. பழனி, டி. அருணாச்சலம், ராதாகிருஷ்ணன், டி. மோகன், ஆறுமுகம், எல். சதாசிவம், எஸ். பிரபாகரன், எம்.எஸ். தங்கமணி, கே. சேகர், எம். கணேசன், டி. சண்முகம், எஸ். நடராஜன், ஆர். ஆதிமூலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த மாவட்ட தலைவர்கள், பொறுப்பாளர்கள், இளைஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.



இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. வெற்றி வேட்பாளர் – மாவட்ட கழக செயலாளர் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வாலாஜாபேட்டை நகரம் முழுவதும் உள்ள பகுதிகளில் கழக ஆட்சியின் சாதனைகள் எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.



திட்டக்குடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் சி.வி. கணேசன் தனது சொந்த ஊரான கழுதூரில் வாக்கு சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் வாக்கு சேகரித்தனர்.



விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் அவர்களுக்கு விருத்தாசலம் தெற்கு ஒன்றியம் கோபுராபுரம் கிராமத்தில் பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சாத்துக்குடல் கனக. செந்தில்நாதன், எடையூர் பொன். சிவக்குமார், இளையராஜா மற்றும் தோழமைக் கட்சியினர் வாக்கு சேகரித்தனர்.

# களத்தில் இளைஞர் அணி

### மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று, வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு:





ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி,
புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.





திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி,
திருவாரூர் மாவட்டம்.





ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி,
ஈரோடு தெற்கு மாவட்டம்.





பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதி,
நாமக்கல் மேற்கு மாவட்டம்.





இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.





சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி,
சேலம் மத்திய மாவட்டம்.





மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி,
மதுரை வடக்கு மாவட்டம்





தாம்பரம் சட்டமன்றத் தொகுதி,
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.





தஞ்சாவூர் சட்டமன்றத் தொகுதி,
தஞ்சாவூர் மத்திய மாவட்டம்.